©
தமிழ்நாடு அரசு
2019

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ.12.00 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 36] சென்னை, புதன்கிழமை, செப்டம்பர் 4, 2019
ஆவணி 18, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050

## பகுதி IV—பிரிவு 2 இன் இணைப்பு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பின்வரும் சட்டமானது, 2018–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 25–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–

**சட்ட எண் 10/2018**

**தமிழ்நாடு மாநிலத்திலுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்தி எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:–

### பகுதி – I

**முன்னுரையாக**

1. (1) இந்தச் சட்டம், 2018–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப் பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

### பகுதி–II.

**1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்திற்கான திருத்தங்கள்.**

தமிழ்நாடு சட்டம் IV/1919. 2. (இதன் பின்பு இந்தப் பகுதியில் 1919–ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 28–ஆம் பிரிவிற்கு பதிலாக, பின்வரும் பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:– 28–ஆம் பிரிவிற்கு பதிலாக அமைக்கப் படுதல்.

"**28. மேயருக்கான தேர்தல்.– (1)** (a). வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நடைமுறைக்கு இணங்கிய வகையில் கோட்டங்களுக்கான வாக்காளர்கள் பட்டியலில் எந்த நபர்களின் பெயர்கள் இருக்கின்றனவோ அந்த நபர்களால் அவர்களுக்கிடையேயிருந்து மேயரானவர் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்;

(b) வழக்கமான அல்லது தற்செயல் தேர்தலொன்றில் மேயர் எவரும் தேர்ந்தெடுக்கப்படவில்லையானால், புதிய தேர்தல் ஒன்று நடத்தப்படுதல் வேண்டும்:

**வரம்புரை:** ஆனால், மேயருக்கான தேர்தலில் எவர் போட்டியிடுகிறாரோ அவர் மன்ற உறுப்பினரொருவருக்கான தேர்தலில் போட்டியிடுவதற்குத் தகுதியுடையவராதல் கூடாது:

**இரண்டாம் வரம்புரை :** மேலும், மன்ற உறுப்பினரொருவராகத் தேர்தலில் போட்டியிடுகிற நபர் ஒருவர் அவர் மேயர் தேர்தலில் போட்டியிடத் தகுதியுடையவராதல் கூடாது:

**மூன்றாம் வரம்புரை:** அதோடுகூட, மன்ற உறுப்பினர் எவரும் மேயர் தேர்தலில் போட்டியிடத் தகுதியுடையவராக இருத்தல் கூடாது.

(2) மேயரின் தேர்தலானது, கோட்டங்களின் மன்ற உறுப்பினர்களின் வழக்கமான தேர்தல்கள் நடைபெறும் அதே நேரத்திலேயும் மற்றும் அதே இடங்களிலும் வழக்கமாகவே நடைபெறும்.

(3) வழக்கமான தேர்தலொன்றில் தேர்ந்தெடுக்கப்படுகிற மேயரின் பதவிக் காலம், பிறவாறு வெளிப்படையாக வகை செய்யப்பட்டால் தவிர, வழக்கமான காலியிடம் ஏற்பட்ட நாளின் நண்பகலில் தொடங்கி ஐந்தாண்டுகளாகும்.

(4) மேயர் பதவியில் ஏற்படும் தற்செயல் காலியிடம் எதுவும் புதிய தேர்தல் மூலம் நிரப்பப்படவேண்டும். அவ்வாறு ஏற்பட்ட காலியிடம் எதிலும் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் ஒருவர், உடனடியாகப் பதவியேற்றல் வேண்டும்; மற்றும் அவர், எவருடைய காலியிடத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரோ, அந்த நபர் அக்காலியிடம் ஏற்படாதிருந்தால் எவ்வளவு காலம் வரை பதவியில் இருப்பதற்கு உரிமைத் தகுதிபெற்றிருந்திருப்பாரோ அவ்வளவு காலம் வரையிலும் மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்.

(5) தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் பிறவாறு பணித்தாலன்றி, (1)–ஆம் உட்பிரிவின்படி மேயருக்கான வழக்கமான தேர்தல் நடத்தப்படவேண்டிய தேதிக்கு முன்னர் ஆறு மாதங்களுக்குள்ளாக மேயரின் பதவியில் ஏற்படும் தற்செயல் காலியிடம் எதுவும் நிரப்பப்படுதல் கூடாது.

(6) மேயர், மன்றத்தின் பதவி வழி உறுப்பினராவார்; மற்றும் அவர் மன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவரின் அனைத்து உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் பெற்றவராவார்.

44–AC எனும் பிரிவிற்கான திருத்தம்.

3. 1919–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 44–AC எனும் பிரிவில்,–

(1) ஓரத் தலைப்பில் ‘‘மேயர் அல்லது’’ எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(2) (1)–ஆம் உட்பிரிவில், ‘‘மேயர் அல்லது’’ எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(3) (12)–ஆம் உட்பிரிவில், ‘‘நேர்விற்கேற்ப, மேயர் அல்லது துணை மேயர்’’ என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, துணை மேயர்’’ எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) (13)–ஆம் உட்பிரிவில், ‘‘மேயர் அல்லது’’ எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(5) (14)–ஆம் உட்பிரிவில், ‘‘மேயர் ஒருவர் அல்லது’’ எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

59–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. 1919–ஆம் ஆண்டுச் சட்டத்தின், 59–ஆம் பிரிவில், (2)–ஆம் உட்பிரிவில் (c) எனும் கூறில், ‘‘மன்ற உறுப்பினர்’’ என்னும் சொற்களுக்குப் பதிலாக, ‘‘மன்ற உறுப்பினர் அல்லது மேயர்’’ எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி – III

## 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 15/1971.

5. (இதன் பின்பு இந்தப் பகுதியில் 1971–ஆம் ஆண்டு சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 29–ஆம் பிரிவிற்குப் பதிலாக, பின்வரும் பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:– 29–ஆம் பிரிவிற்குப் பதிலாக அமைக்கப் படுதல்.

“29. மேயருக்கான தேர்தல்.– (1) (a) வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நடைமுறைக்கு இணங்கிய வகையில் சிற்றொகுதிகளுக்கான வாக்காளர்கள் பட்டியலில் எந்த நபர்களின் பெயர்கள் இருக்கின்றனவோ அந்த நபர்களால் அவர்களுக்கிடையேயிருந்து மேயரானவர் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்;

(b) வழக்கமான அல்லது தற்செயல் தேர்தலொன்றில் மேயர் எவரும் தேர்ந்தெடுக்கப் படவில்லையானால், புதிய தேர்தல் ஒன்று நடத்தப்படுதல் வேண்டும்:

**வரம்புரை:** மேயருக்கான தேர்தலில் எவர் போட்டியிடுகிறாரோ அவர் மன்ற உறுப்பினரொருவருக்கான தேர்தலில் போட்டியிடுவதற்குத் தகுதியுடையவராதல் கூடாது:

**இரண்டாம் வரம்புரை:** மேலும், மன்ற உறுப்பினரொருவராகத் தேர்தலில் போட்டியிடுகிற நபர் ஒருவர் அவர் மேயர் தேர்தலில் போட்டியிடத் தகுதியுடையவராதல் கூடாது:

**மூன்றாம் வரம்புரை:** அதோடுகூட, மன்ற உறுப்பினர் எவரும் மேயர் தேர்தலில் போட்டியிடத் தகுதியுடையவராக இருத்தல் கூடாது.

(2) மேயரின் தேர்தலானது, சிற்றொகுதிகளின் மன்ற உறுப்பினர்களின் வழக்கமான தேர்தல்கள் நடைபெறும் அதே நேரத்திலேயும் மற்றும் அதே இடங்களிலும் வழக்கமாகவே நடைபெறும்.

(3) வழக்கமான தேர்தலொன்றில் தேர்ந்தெடுக்கப்படுகிற மேயரின் பதவிக் காலம், பிறவாறு வெளிப்படையாக வகை செய்யப்பட்டால் தவிர, வழக்கமான காலியிடம் ஏற்பட்ட நாளின் நண்பகலில் தொடங்கி ஐந்தாண்டுகளாகும்.

(4) மேயர் பதவியில் ஏற்படும் தற்செயல் காலியிடம் எதுவும் புதிய தேர்தல் மூலம் நிரப்பப்படவேண்டும். அவ்வாறு ஏற்பட்ட காலியிடம் எதிலும் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் ஒருவர், உடனடியாகப் பதவியேற்றல் வேண்டும்; மற்றும் அவர், எவருடைய காலியிடத்திற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளாரோ, அந்த நபர் அக்காலியிடம் ஏற்படாதிருந்தால் எவ்வளவு காலம் வரை பதவியில் இருப்பதற்கு உரிமைத் தகுதி பெற்றிருந்திருப்பாரோ அவ்வளவு காலம் வரையிலும் மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்.

(5) தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் பிறவாறு பணித்தாலன்றி, (1)–ஆம் உட்பிரிவின்படி மேயருக்கான வழக்கமான தேர்தல் நடத்தப்படவேண்டிய தேதிக்கு முன்னர் ஆறு மாதங்களுக்குள்ளாக மேயரின் பதவியில் ஏற்படும் தற்செயல் காலியிடம் எதுவும் நிரப்பப்படுதல் கூடாது.

(6) மேயர், மன்றத்தின் பதவி வழி உறுப்பினராவார்; மற்றும் அவர் மன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவரின் அனைத்து உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் பெற்றவராவார்.

6. 1971–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 48–AB எனும் பிரிவில்,–

(1) ஓரத் தலைப்பில் “மேயர் அல்லது” எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்; 48–AB எனும் பிரிவிற்கான திருத்தம்.

(2) (1)–ஆம் உட்பிரிவில், “மேயர் அல்லது” எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(3) (12)–ஆம் உட்பிரிவில், ‘‘நேர்விற்கேற்ப, மேயர் அல்லது துணை மேயர்’’ என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘துணை மேயர்’’ எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) (13)–ஆம் உட்பிரிவில், ‘‘மேயர் அல்லது’’ எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(5) (14)–ஆம் உட்பிரிவில், ‘‘மேயர் ஒருவர் அல்லது’’ எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

66–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

7. 1971–ஆம் ஆண்டுச் சட்டத்தின், 66–ஆம் பிரிவில், (2)–ஆம் உட்பிரிவில் (b) எனும் கூறில், ‘‘மன்ற உறுப்பினர்’’ என்னும் சொற்களுக்குப் பதிலாக, ‘‘மன்ற உறுப்பினர் அல்லது மேயர்’’ எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி – IV

## 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

29–ஆம் பிரிவிற்கு பதிலாக அமைக்கப் படுதல்.

தமிழ்நாடு சட்டம் 25/1981.

8. (இதன் பின்பு இந்தப் பகுதியில் 1981–ஆம் ஆண்டு சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் 29–ஆம் பிரிவுக்கு பதிலாக, பின்வரும் பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:–

**‘‘29. மேயருக்கான தேர்தல்.–** (1) (a) வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நடைமுறைக்கு இணங்கிய வகையில் கோட்டங்களுக்கான வாக்காளர்கள் பட்டியலில் எந்த நபர்களின் பெயர்கள் இருக்கின்றனவோ அந்த நபர்களால் அவர்களுக்கிடையேயிருந்து மேயரானவர் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்;

(b) வழக்கமான அல்லது தற்செயல் தேர்தலொன்றில் மேயர் எவரும் தேர்ந்தெடுக்கப்படவில்லையானால், புதிய தேர்தல் ஒன்று நடத்தப்படுதல் வேண்டும்:

**வரம்புரை:** ஆனால், மேயருக்கான தேர்தலில் எவர் போட்டியிடுகிறாரோ அவர் மன்ற உறுப்பினரொருவருக்கான தேர்தலில் போட்டியிடுவதற்குத் தகுதியுடையவராதல் கூடாது:

**இரண்டாம் வரம்புரை:** மேலும், மன்ற உறுப்பினரொருவராகத் தேர்தலில் போட்டியிடுகிற நபர் ஒருவர் அவர் மேயர் தேர்தலில் போட்டியிடத் தகுதியுடையவராதல் கூடாது:

**மூன்றாம் வரம்புரை:** அதோடுகூட, மன்ற உறுப்பினர் எவரும் மேயர் தேர்தலில் போட்டியிடத் தகுதியுடையவராக இருத்தல் கூடாது.

(2) மேயரின் தேர்தலானது, கோட்டங்களின் மன்ற உறுப்பினர்களின் வழக்கமான தேர்தல்கள் நடைபெறும் அதே நேரத்திலேயும் மற்றும் அதே இடங்களிலும் வழக்கமாகவே நடைபெறும்.

(3) வழக்கமான தேர்தலொன்றில் தேர்ந்தெடுக்கப்படுகிற மேயரின் பதவிக் காலம், பிறவாறு வெளிப்படையாக வகை செய்யப்பட்டால் தவிர, வழக்கமான காலியிடம் ஏற்பட்ட நாளின் நண்பகலில் தொடங்கி ஐந்தாண்டுகளாகும்.

(4) மேயர் பதவியில் ஏற்படும் தற்செயல் காலியிடம் எதுவும் புதிய தேர்தல் மூலம் நிரப்பப்படவேண்டும். அவ்வாறு ஏற்பட்ட காலியிடம் எதிலும் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் ஒருவர், உடனடியாகப் பதவியேற்றல் வேண்டும்; மற்றும் அவர், எவருடைய காலியிடத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரோ, அந்த நபர் அக்காலியிடம் ஏற்படாதிருந்தால் எவ்வளவு காலம் வரை பதவியில் இருப்பதற்கு உரிமைத் தகுதி பெற்றிருந்திருப்பாரோ அவ்வளவு காலம் வரையிலும் மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்.

**(5)** தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் பிறவாறு பணித்தாலன்றி, **(1)–**ஆம் உட்பிரிவின்படி மேயருக்கான வழக்கமான தேர்தல் நடத்தப்படவேண்டிய தேதிக்கு முன்னர் ஆறு மாதங்களுக்குள்ளாக மேயரின் பதவியில் ஏற்படும் தற்செயல் காலியிடம் எதுவும் நிரப்பப்படுதல் கூடாது.

**(6)** மேயர், மன்றத்தின் பதவி வழி உறுப்பினராவார்; மற்றும் அவர் மன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவரின் அனைத்து உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் பெற்றவராவார்.

**9. 1981–**ஆம் ஆண்டுச் சட்டத்தின் **50–C** எனும் பிரிவில்,– 50–C எனும் பிரிவிற்கான திருத்தம்.

**(1)** ஓரத் தலைப்பில் ''மேயர் அல்லது'' எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

**(2)** **(1)–**ஆம் உட்பிரிவில், ''மேயர் அல்லது'' எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

**(3)** **(12)–**ஆம் உட்பிரிவில், ''நேர்விற்கேற்ப, மேயர் அல்லது துணை மேயர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''துணை மேயர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

**(4)** **(13)–**ஆம் உட்பிரிவில், ''மேயர் அல்லது'' எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

**(5)** **(14)–**ஆம் உட்பிரிவில், ''மேயர் ஒருவர் அல்லது'' எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**10. 1981–**ஆம் ஆண்டுச் சட்டத்தின், **68–**ஆம் பிரிவில், **(2)–**ஆம் உட்பிரிவில் (b) எனும் கூறில், ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''மன்ற உறுப்பினர் அல்லது மேயர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும். 68–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

## பகுதி–V

## 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் V/1920.

**11.** (இதன் பின்பு இந்தப் பகுதியில் **1920–**ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) **1920–**ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் **3–T** எனும் பிரிவில், **(1)–**ஆம் உட்பிரிவில், ''பேரூராட்சியொன்றின் உறுப்பினர்கள்'' என்னும் சொற்றொடருக்குப் பின்னர், ''(அதன் தலைவரைத் தவிர)'' எனும் சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும். 3–T எனும் பிரிவிற்கான திருத்தம்.

**12. 1920–**ஆம் ஆண்டுச் சட்டத்தின், **7–**ஆம் பிரிவில், **(1)–**ஆம் உட்பிரிவில், ''மன்றத்தின் அத்தகைய எண்ணிக்கையிலான உறுப்பினர்கள்'' என்னும் சொற்றொடருக்குப் பின்னர், ''(அதன் தலைவரைத் தவிர)'' எனும் சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும். 7–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**13. 1920–**ஆம் ஆண்டுச் சட்டத்தின் 7–A–ஆம் பிரிவிற்கு பதிலாக கீழ்க்கண்ட பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:– 7–Aஆம் பிரிவிற்கு பதிலாக அமைக்கப்படுதல்.

''7-A. தலைவருக்கான தேர்தல்.**–** வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நடைமுறைக்கு இணங்கிய வகையில் அந்த நகராட்சிக்கான வாக்காளர்கள் பட்டியலில் எந்த நபர்களின் பெயர்கள் இருக்கின்றனவோ அந்த நபர்களால் அவர்களுக்கிடையேயிருந்து தலைவர் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்:

**வரம்புரை:** ஆனால், தலைவருக்கான தேர்தலில் எவர் போட்டியிடுகிறாரோ அவர் மன்ற உறுப்பினரொருவருக்கான தேர்தலில் போட்டியிடுவதற்குத் தகுதியுடையவராதல் கூடாது:

**இரண்டாம் வரம்புரை:** மேலும், மன்ற உறுப்பினரொருவராகத் தேர்தலில் போட்டியிடுகிற நபர் ஒருவர் அவர் தலைவர் தேர்தலில் போட்டியிடத் தகுதியுடையவராதல் கூடாது:

**மூன்றாம் வரம்புரை:** அதோடுகூட, மன்ற உறுப்பினர் எவரும் தலைவர் தேர்தலில் போட்டியிடத் தகுதியுடையவராக இருத்தல் கூடாது.''.

8–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

14. 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 8–ஆம் பிரிவில்,–

(1) ஓரத் தலைப்பில் ''மன்ற உறுப்பினர்கள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்கள்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (1)–ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினர்கள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, '' தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (2)–ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினர்கள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, '' தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) (2)–ஆம் உட்பிரிவிற்குப் பின்னர், பின்வரும் உட்பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(2–A) தலைவரின் தேர்தலானது, நகராட்சிகளின் மன்ற உறுப்பினர்களின் வழக்கமான தேர்தல்கள் நடைபெறும் அதே நேரத்திலேயும் மற்றும் அதே இடங்களிலும் வழக்கமாகவே நடைபெறும்;'';

(5) (3)–ஆம் உட்பிரிவில், ''ஒரு மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினரொருவர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(6) (4)–ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினரொருவர்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினரொருவர்'' எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(7) (5)–ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினரொருவர்'' மற்றும் ''அந்த மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே, ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினரொருவர்'' மற்றும் ''அந்த தலைவர் அல்லது அந்த மன்ற உறுப்பினர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

9–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

15. 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 9–ஆம் பிரிவில்,–

(1) ஓரத் தலைப்பில் ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (1)–ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (3)–ஆம் உட்பிரிவில், ''(1)–ஆம் உட்பிரிவின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் மன்ற உறுப்பினரொருவர்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''(1)–ஆம் உட்பிரிவின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு தலைவர் அல்லது மன்ற உறுப்பினரொருவர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

12–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

16. 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 12–ஆம் பிரிவின் (3)–ஆம் உட்பிரிவிற்கு பின்னர் பின்வரும் உட்பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(4) தலைவரொருவர் பதவியை வகிப்பதிலிருந்து தகுதியற்றவராக ஆகியிருப்பதன் பேரில் அல்லது தாம் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருப்பதன் பேரில் அல்லது தமது பதவிக்கால அளவு முடிவடைந்ததன் பேரில் அல்லது தாம் பிறவாறு தலைவராக இருப்பது அற்றுப்போவதன் பேரில் அவர் தமது பதவியை விட்டு நீங்கியிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.''.

17. 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 12–A எனும் பிரிவிற்குப் பதிலாக பின்வரும் ''பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:– 12–A எனும் பிரிவிற்கு பதிலாக அமைக்கப் படுதல்.

''12–A. துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படாதபோது நடைமுறை– 12–ஆம் பிரிவின்கீழ் நடத்தப்படும் தேர்தலில் துனைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படவில்லையானால் ஒரு புதிய தேர்தல் நடத்தப்பட வேண்டும்.''.

18. 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 14 எனும் பிரிவிற்குப் பதிலாக பின்வரும் பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:– 14–ஆம் பிரிவிற்குப் பதிலாக அமைக்கப்படுதல்.

''(14) தலைவர் மன்றத்தின் மற்றும் மன்றத்தின் ஒவ்வொரு குழுவின் உறுப்பினராயிருத்தல்.– தலைவர், தனது பதவியின் காரணமாக மன்றத்தின் மற்றும் மன்றத்தின் ஒவ்வொரு குழுவின் உறுப்பினராவார்.''.

19. 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 30–ஆம் பிரிவில்,– 30–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) ஓரத் தலைப்பில் ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (1)–ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

20. 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 40–ஆம் பிரிவில் ஓரத்தலைப்பு உள்பட ''தலைவர் அல்லது துணைத் தலைவர்'', என்னும் சொற்றொடரானது வருகிற இடங்களிலெல்லாம், அதற்குப் பதிலாக, ''துணைத் தலைவர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும். 40–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

21. 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 40–A எனும் பிரிவில்,– 40–A எனும் பிரிவிற்கான திருத்தம்.

(1) ஓரத்தலைப்பில், ''தலைவர் அல்லது துணைத் தலைவர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''துணைத் தலைவர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (1)–ஆம் உட்பிரிவில், ''தலைவர் அல்லது துணைத் தலைவர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''துணைத் தலைவர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (12)–ஆம் உட்பிரிவில், ''நேர்விற்கேற்ப, தலைவர் அல்லது துணைத் தலைவர்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''துணைத் தலைவர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) (13)–ஆம் உட்பிரிவில், ''தலைவர் அல்லது'', எனும் சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(5) (14)–ஆம் உட்பிரிவில், ''தலைவர் ஒருவர் அல்லது துணைத் தலைவர் ஒருவர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''துணைத் தலைவர் ஒருவர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

40–B எனும் புதிய பிரிவினைப் புகுத்துதல்.

**22.** 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 40–A எனும் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

“40-B. தலைவரை நீக்குதல்.– (1) மன்றத்தின் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில், ஐந்தில் மூன்று பங்கு என்ற அளவில் அமைந்த உறுப்பினர்கள் சேர்ந்து, அத்தகைய உறுப்பினர்களில் எவரேனும் இருவரால், (இதன் பின்பு இப்பிரிவில் மண்டல இயக்குநர் என்று குறிப்பிடப்படுவதான) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரிடம் முன்னிடப்பட்ட எழுத்துருவிலான அறிவிப்பின் மூலம், தலைவர் இந்தச் சட்டத்தின் வகைமுறை எதனையுமோ அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி, துணை விதி, ஒழுங்குமுறை விதி அல்லது சட்டப்படியான ஆணை எதனையுமோ வேண்டுமென்றே நிறைவேற்றாமல் விட்டுவிடுகிறார் அல்லது மறுக்கிறார் அல்லது அதற்குக் கீழ்ப்படியாதிருக்கிறார் அல்லது அவரிடம் உற்றமைந்திருக்கும் அதிகாரம் எதனையுமோ தவறாகப் பயன்படுத்துகிறார் என்பதாக அந்தத் தலைவருக்கெதிராகத் தீர்மானமொன்றைச் செய்வதற்கான தமது உட்கருத்தினை, தலைவருக்கு நகலொன்றை அனுப்பியும், வெளிப்படுத்தலாம். மண்டல இயக்குநரானவர் அத்தகைய அறிவிப்பினைப் பெற்றதன் பேரில், நகராட்சி அலுவலகத்தில் மண்டல இயக்குநர் குறிக்கக்கூடிய தேதி ஒன்றில், மன்றத்தின் தீர்மானத்தைப் பரிசீலனை செய்வதற்காகவும் மற்றும் மன்றத்தின் கருத்துகளைப் பதிவு செய்வதற்காகவும் சிறப்புக் கூட்டம் ஒன்றைக் கூட்டுதல் வேண்டும். மன்றத்தின் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில் ஐந்தில் நான்கு என்ற எண்ணிக்கையிலான மன்ற உறுப்பினர்கள் வந்திருந்து தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிப்பார்களானால், அத்தீர்மானமானது, மன்றத்தினால் நிறைவேற்றப்பட்டதாகக் கொள்ளப்படும்; மற்றும் மன்றத்தின் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில் ஐந்தில் நான்கு என்ற எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் வந்திருந்து மற்றும் வாக்களித்து அதனை நிறைவேற்றவில்லையானால் அது கைவிடப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) கூட்டத்திற்கான அறிவிப்பின் நகல் ஒன்று தலைவருக்கும் மற்றும் அனைத்து மன்ற உறுப்பினர்களுக்கும் கூட்டத்தின் தேதியிலிருந்து குறைந்தது பதினைந்து நாட்களுக்கு முன்னதாக வழங்கும்படி மண்டல இயக்குநர் ஆவன செய்தல் வேண்டும்.

(3) இந்தப் பிரிவின்படி கூட்டப்படும் கூட்டத்திற்கு மண்டல இயக்குநர் தலைமை வகித்தல் வேண்டும்; மற்றும் அக்கூட்டத்திற்குப் பிறநபர் எவரும் தலைமை வகித்தலாகாது. கூட்டத்திற்காகக் குறிக்கப்பட்ட நேரத்திற்குப் பின்பு அரை மணி நேரத்திற்குள்ளாக மண்டல இயக்குநர் அக்கூட்டத்திற்குத் தலைமை வகிப்பதற்கு வரவில்லையானால் அக்கூட்டமானது, (4)–ஆம் உட்பிரிவின்படி மண்டல இயக்குநரால் தலைவருக்கும் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கும் குறிக்கப்பட்டு அறிவிக்கப்படவேண்டிய தேதி ஒன்றுக்கு ஒத்தி வைக்கப்படுவதாதல் வேண்டும்.

(4) மண்டல இயக்குநர் அக்கூட்டத்திற்குத் தலைமை வகிக்க இயலாதிருப்பாராயின், அவர் எழுத்துருவில் தம் காரணங்களைப் பதிவு செய்தபின்பு, அவர் குறிக்கக்கூடிய அத்தகைய பிற தேதிக்கு அக்கூட்டத்தினை ஒத்திவைக்கலாம். அவ்வாறு குறிக்கப்படும் தேதியானது (1)–ஆம் உட்பிரிவின்படி கூட்டத்திற்காக குறிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குப் பிந்தியதாக இருத்தல் கூடாது. ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்திற்காகக் குறிக்கப்படும் தேதி குறித்து தலைவருக்கும் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கும் பதினைந்து நாட்களுக்கு குறையாத கால அளவிலான அறிவிப்பு கொடுக்கப்படுதல் வேண்டும்.

(5) (3) மற்றும் (4)–ஆம் உட்பிரிவுகளில் வகைசெய்யப்பட்டுள்ளவாறு தவிர, இந்தப் பிரிவின்படி தலைவரை நீக்குவதற்கான அறிவிப்பு ஒன்றைப் பரிசீலனை செய்யும் நோக்கத்திற்காக கூட்டப்படும் ஒரு கூட்டமானது காரணம் எதற்காகவும் ஒத்திவைக்கப்படுதல் கூடாது.

(6) இந்தப்பிரிவின்படி கூட்டப்படும் கூட்டம் தொடங்கியவுடன், மண்டல இயக்குநர், எந்த அறிவிப்பைப் பரிசீலனை செய்வதற்காக அது கூட்டப்பட்டிருக்கிறதோ, அந்த அறிவிப்பை மன்றத்திற்குப் படித்துக் காட்டுதல் வேண்டும்.

(7) மண்டல இயக்குநர் அறிவிப்பின் தகுதிப்பாடுகளைக் குறித்து பேசுவதோ, கூட்டத்தில் வாக்களிக்க உரிமைத்தகுதி பெறுவதோ கூடாது.

(8) கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகளில் மன்றத்தின் கருத்துக்கள் உரிய முறையில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் கூட்டம் முடிவடைந்ததும் உடனடியாக நடவடிக்கைக் குறிப்புகளின் நகல் மண்டல இயக்குநரால், நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக, மாநில அரசுக்கு மேலனுப்பப்படுதல் வேண்டும்.

(9) மாநில அரசானது இதன் பொருட்டு மன்றத்தின் கருத்துக்களைப் பரிசீலனை செய்த பின்பு, எழுத்துருவிலான அறிவிப்பு மூலம், குறித்துரைக்கப்பட்ட தேதி ஒன்றிற்குள்ளாக அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட அவரது செயல்பாடுகள் அல்லது விடுபாடுகள் தொடர்பான அவரது விளக்கவுரையினை அளிக்குமாறு தலைவரைக் கேட்டுக்கொள்ளலாம். குறித்துரைக்கப்பட்ட தேதிக்குள் விளக்கவுரையானது பெறப்பட்டால், மற்றும் அந்த விளக்கவுரையானது நிறைவாக உள்ளது என மாநில அரசு கருதுமாயின், அவர்கள் அந்த அறிவிப்பு தொடர்பான மேல் நடவடிக்கையை விட்டுவிடலாம்.குறித்துரைக்கப்பட்டதேதிக்குள்விளக்கவுரைபெறப்படவில்லையெனில் அல்லது அத்தகைய தேதிக்குள் பெறப்பட்ட விளக்கவுரையானது நிறைவளிப்பதாக இல்லையெனில் மாநில அரசானது, தலைவரைப் பதவி நீக்கம் செய்யும் ஆணைகளைப் பிறப்பிக்கலாம். தலைவரைப் பதவி நீக்கம் செய்யும் மாநில அரசின் ஆணைகள் இறுதியானதாதல் வேண்டும். தலைவரைப் பதவி நீக்கம் செய்யும் மாநில அரசின் ஆணைகள் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும்.

(10) (9)–ஆம் உட்பிரிவின்படி தலைவர் பதவியிலிருந்து தம்மை நீக்குவதற்குத் தம் பொருட்டு ஆணைகள் வெளியிடப்பட்டிருக்கின்ற நபர் எவரும் வகுத்துரைக்கக்கூடிய முறையில் நகராட்சி மன்றத்திற்கான அடுத்த வழக்கமான தேர்தல்களுக்கான அறிவிப்பானது வெளியிடப்படும் அந்தத் தேதி வரையில் அல்லது (9)–ஆம் உட்பிரிவின்படி வெளியிடப்பட்ட ஆணையில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து ஓர் ஆண்டு முடிவுறும் வரையில் தலைவர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியற்றவராதல் வேண்டும்.''.

23. 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 43–C எனும் பிரிவின் (2)–ஆம் உட்பிரிவில்,– 43–C எனும் பிரிவிற்கான திருத்தம்.

(1) ''மன்ற உறுப்பினர்கள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, '' தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்கள்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

24. 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 48–ஆம் பிரிவில்,– 48–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (1)–ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினரொருவராக'' எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2)–ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினரொருவராக'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

25. 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 49–ஆம் பிரிவில்,– 49–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (1)–ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2)–ஆம் உட்பிரிவில்,–

(a) முகப்புப் பகுதியில், ''மன்ற உறுப்பினரொருவராக'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''தலைவவொருவராக அல்லது மன்ற உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) (e)–எனும் கூறில், இரு இடங்களில், ''மன்ற உறுப்பினரொருவர்'' என வரும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினரொருவர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

50– ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**26. 1920–**ஆம் ஆண்டுச் சட்டத்தின் **50–**ஆம் பிரிவில்,–

**(1)** ஓரத் தலைப்பில், ''மன்ற உறுப்பினர்கள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்கள்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

**(2)** **(1)–**ஆம் உட்பிரிவில்,–

(a) முகப்புப் பகுதியில், ''மன்ற உறுப்பினரொருவர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினரொருவர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) (f)–எனும் கூறில், ''பிற மன்ற உறுப்பினர் எவரின்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''தலைவரின் அல்லது பிற மன்ற உறுப்பினர் எவரின்'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(c) (i)–எனும் கூறில்,–

*(i)* ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, '' தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

*(ii)* வரம்புரையில், ''மன்ற உறுப்பினரொருவர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினரொருவர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

**(3)** **(4)–**ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினரொருவர்'' மற்றும் ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்கள் எங்கெல்லாம் வருகிறதோ, அதற்குப் பதிலாக, முறையே ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினரொருவர்'' மற்றும் ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

51– ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**27. 1920–**ஆம் ஆண்டுச் சட்டத்தின் **51–**ஆம் பிரிவில்,–

**(1)** ஓரத் தலைப்பில், ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

**(2)** **(1)–**ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினரொருவர்'', ''மன்ற உறுப்பினரெவரும்'' மற்றும் ''அத்தகைய மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினரொருவர்'', ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினரெவரும்'' மற்றும் ''அத்தகைய தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

**(3)** **(3)–**ஆம் உட்பிரிவில், ''மன்ற உறுப்பினர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தலைவர் அல்லது அந்த மன்ற உறுப்பினர்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

368– ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**28. 1920–**ஆம் ஆண்டுச் சட்டத்தின் **368–**ஆம் பிரிவில்,

(1) (2)–ஆம் உட்பிரிவில், ‘‘மன்ற உறுப்பினர்கள்’’ என்னும் சொற்களுக்குப் பதிலாக, ‘‘தலைவரும் மன்ற உறுப்பினர்களும்’’ எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (5)–ஆம் உட்பிரிவில், ‘‘மன்ற உறுப்பினர்கள்’’ என்னும் சொற்களுக்குப் பதிலாக, ‘‘தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள்’’ எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (6)–ஆம் உட்பிரிவில், ‘‘மன்ற உறுப்பினர்கள்’’ என்னும் சொற்களுக்குப் பதிலாக, ‘‘தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்கள்’’ எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சு.ச. பூவலிங்கம்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**க. நரசிம்மன்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பின்வரும் சட்டமானது, 2018–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 26–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–

**சட்ட எண் 11/2018**

## 1998–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தை மேலும் திருத்துவற்கானதொரு சட்டம்.

இந்திய குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக.-

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம் 2018–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டம் என்று அழைக்கப்பெறும்.

(2) இது 2017–ஆம் ஆண்டு அக்டோபர் 17–ஆம் நாள் அன்று நடைமுறைக்கு வந்துவிட்டுருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 43/1998.

16–ஆம் பிரிவுக்கான திருத்தம்

2. 1998–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் 16–ஆம் பிரிவில் உள்ள (i) கூறுக்கு பின்பு பின்வரும் கூறுகள் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

(j) அறிவுரை பெறுதல் மற்றும் நிதி சேவைகளை வரையறுக்கப்பட்ட தமிழ்நாடு நிதி முதலீட்டு நிறுவனம் அல்லது வரையறுக்கப்பட்ட தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகம் அல்லது வரையறுக்கப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்திடமிருந்து அரசின் முன் ஒப்புதலுடன்:

**வரம்புரை:** ஆனால் வரையறுக்கப்பட்ட தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் அல்லது வரையறுக்கப்பட்ட தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகம் அல்லது வரையறுக்கப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் தொடர்பான அரசு செயலாளர், நிதி துறையின் அரசு செயலாளர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அல்லது தொடர்புடைய தலைமை நிர்வாக அலுவலர் அடங்கிய குழு நேர்வுக்கேற்ப கொள்முதல் செய்யப்பட வேண்டிய சேவைகளுக்கான கட்டணத்தை நிர்ணயிக்க வேண்டும்.

(k) வரையறுக்கப்பட்ட இந்திய நிலக்கரி நிறுவனம் அல்லது வரையறுக்கப்பட்ட சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கங்கள் நிறுவனம் அல்லது அதைப் போன்ற அரசு பொதுவுடைமையாக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்கள் பிற எதுவும்;

(l) வரையறுக்கப்பட்ட இந்திய கப்பல் போக்குவரத்துக் கழக சொந்த கப்பல்களின் போக்குவரத்து சேவைகள்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 6/2017

நீக்கறவு மற்றும் காப்புரை.

3. (1) 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அவசரச் சட்டம் (இரண்டாம் திருத்தம்) ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது.

தமிழ்நாடு சட்டம் 43/**1998**.

**(2)** அத்தகையை நீக்கறவு எவ்வாறு இருப்பின் மேற்சொன்ன அவசர சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறான **1998—**ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் இந்தச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறான மேற்சொன்ன சட்டத்தின்படி செய்யப்பட்டு இருப்பதாக அல்லது எடுக்கப்பட்டு இருப்பதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சு.ச. பூவலிங்கம்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**க. நரசிம்மன்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2018–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 26 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–

**சட்ட எண் 12/2018**

## தமிழ்நாடு மாநிலத்தில் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.

இந்திய குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டின் தமிழ்நாடு மாநிலத்தின் சட்டமன்றப் பேரவையினால் சட்டமாக இயற்றப்படுவதாகுக.-

### பகுதி – I

### முன்னுரை

1. (1) இந்தச் சட்டம், 2018–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் என்று அழைக்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, 2017–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 3–ஆம் நாள்முதல் நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

### பகுதி – II

1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் IV/1919.

2. (இதன் பின்பு இந்தப் பகுதியில் 1919–ஆம் ஆண்டு சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின் 5–ஆம் பிரிவில் (3)–ஆம் உட்பிரிவின் வரம்புரையினை விட்டுவிடப்படுதல் வேண்டும். 5 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. 1919–ஆம் ஆண்டு சட்டத்தில் உள்ள, 46-AA, 46–AAA மற்றும் 46–AAAA ஆகிய பிரிவுகளை விட்டுவிடப்படுதல் வேண்டும். 46–AA, 46-AAA மற்றும் 46–AAAA ஆகிய பிரிவுகளை விட்டுவிடுதல்.

### பகுதி – III

### 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் V/1920.

4. 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் உள்ள 43-AA, 43-AAA மற்றும் 43-AAAA ஆகிய பிரிவுகளை விட்டுவிடப்படுதல் வேண்டும், 43-AA, 43-AAA மற்றும் 43-AAAA ஆகிய பிரிவுகளை விட்டு விடுதல்.

### பகுதி – IV

### 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 15/1971.

5. (இதன் பின்பு இந்தப் பகுதியில் 1971–ஆம் ஆண்டு சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் 5–ஆம் பிரிவில் (3) ஆம் உட்பிரிவின் வரம்புரையினை விட்டுவிடுதல் வேண்டும். 5 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

6. 1971–ஆம் ஆண்டு சட்டத்தில் உள்ள 50–A, 50-AA மற்றும் 50-AAA ஆகிய பிரிவுகளை விட்டுவிடப்படுதல் வேண்டும். 50-A, 50–AA மற்றும் 50–AAA ஆகிய பிரிவுகளை விட்டு விடுதல்.

பகுதி – V

## 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்திற்கான திருத்தங்கள்.

5 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

7. (இதன் பின்பு இந்தப் பகுதியில் 1981–ஆம் ஆண்டு சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவில் (3)–ஆம் உட்பிரிவின் வரம்புரையினை விட்டுவிடுதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 25/1981,

52–A, 52–AA மற்றும் 52 –AAA ஆகிய பிரிவுகளை விட்டு விடுதல்.

8. 1981–ஆம் ஆண்டு சட்டத்தில் உள்ள 52-A, 52-AA மற்றும் 52-AAA ஆகிய பிரிவுகளை விட்டுவிடப்படுதல் வேண்டும்

பகுதி – VI

## 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திற்கான திருத்தம்.

28–A, 28–AA மற்றும் 28–AAA ஆகிய பிரிவுகளை விட்டு விடுதல்.

9. 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் உள்ள 28-A, 28-AA மற்றும் 28-AAA ஆகிய பிரிவுகளை விட்டுவிடப்படுதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 21/1994.

நீக்கரவு மற்றும் காப்பு.

10. (1) 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி மன்றங்களின் (திருத்த) அவசரச் சட்டம் ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்பட்டது. தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/2017.

(2) அத்தகைய நீக்கறவு எவ்வாறிருப்பினும், 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம், 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டம், 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டம் மற்றும் 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் ஆகியவற்றிலுள்ளபடி செய்யப்பட்ட அல்லது எடுக்கப்பட்ட செயல் எதுவும் மேற்சொன்ன அவசரச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறு இந்தச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறு முறையே இந்தச் சட்டங்களின் படி செய்யப்பட்டதாக அல்லது எடுக்கப்பட்டதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் IV/1919.
தமிழ்நாடு சட்டம் V/1920.
தமிழ்நாடு சட்டம் 15/1971.
தமிழ்நாடு சட்டம் 25/1981.
தமிழ்நாடு சட்டம் 21/1994.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சு.ச. பூவலிங்கம்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**க. நரசிம்மன்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பின்வரும் சட்டமானது, 2018–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 26-ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–

**சட்ட எண் 13/2018**

## 1987–ம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக் கழகம், சென்னை, சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் அறுபத்தெட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

(1) இந்தச் சட்டம், 2018–ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக் கழகம், சென்னை (திருத்தம்) சட்டம் என்று அழைக்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வரும்.

தமிழ்நாடு சட்டம் 37/1987 2. 1987ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை, சட்டத்தின் 10–ஆம் பிரிவில், (2)–ஆம் உட்பிரிவுக்குப் பதிலாக, அதன் வரம்புரை உள்ளடங்கலாக, பின்வரும் உட்பிரிவுகள் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:- 10–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

"(2) (1)–ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, அந்தக்குழு –

(i) அரசினால் நியமிக்கப்படுபவரும், அரசு முதன்மைச் செயலாளர் படிநிலைக்குக் குறையாத மாநில அரசின் ஓய்வு பெற்ற அல்லது பணிபுரியும் அலுவலராக இருப்பவருமான அல்லது சிறந்த கல்வியாளருமான ஒருவரை,

(ii) ஆட்சிப் பேரவையினால் நியமிக்கப்படுபவரும், சிறந்த கல்வியாளருமான ஒருவரை, மற்றும்

(iii) ஆளுகைக்குழுவினால் நியமிக்கப்படுபவரும், சிறந்த கல்வியாளருமான ஒருவரைக் கொண்டது ஆகும்.

**விளக்கம்:-** இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக "சிறந்த கல்வியாளர்" என்பது, மருத்துவக் கல்வி துறையில், –

(i) மாநில அரசால் அல்லது மைய அரசால் நிறுவப்பட்ட பல்கலைக் கழகம் எதனின் துணைவேந்தராக இருக்கிற அல்லது இருந்துள்ள, அல்லது

(ii) மாநில அரசால் அல்லது மைய அரசால் நிறுவப்பட்ட மருத்துவக் கல்லூரி எதிலும் அல்லது பல்கலைக் கழகம் எதிலும் அல்லது இரண்டினையும் சேர்த்து பேராசிரியராக அல்லது முதல்வராக குறைந்தது பத்தாண்டுகள் அனுபவம் பெற்றுள்ள புகழ்பெற்ற கல்வியாளராக இருக்கிற, அல்லது

(iii) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் எதனின் இயக்குநராக இருக்கிற அல்லது இருந்துள்ள நபர் என்று பொருள்படும்.

**வரம்புரை:** ஆனால், அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளில் எதனின் உறுப்பினராக இருத்தல் ஆகாது அல்லது பல்கலைக்கழகத்துடன் அல்லது பல்கலைக் கழகத்தின் கல்லூரி எதனுடனும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் எதனுடனும் தொடர்புடையவராக இருத்தல் ஆகாது.

(2–A) துணைவேந்தராக நியமிக்கப்படுவதற்காக குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நபர்:-

(i) உயர்ந்தளவு தகுதி, நேர்மை, ஒழுக்கம், அமைப்பு மூலமான பொறுப்புடைய புகழ்பெற்ற கல்வியாளராக இருப்பார்;

(ii) தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட ஆணையின் மூலம், துணைவேந்தருடன் கலந்தாய்வு செய்து மாநில அரசால் குறித்துரைக்கப்படலாகும் கல்வித்தகுதிகள் மற்றும் அனுபவம் கொண்டிருப்பார்.

(2–B) அரசால், ஆட்சிப் பேரவையினால் மற்றும் ஆளுகைக்குழுவால், அக்குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் நடைமுறையானது, துணைவேந்தரின் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக் கூடிய நாளுக்கு முன்பு ஆறு மாதங்களில் தொடங்குதல் வேண்டும் மற்றும் துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக் கூடிய நாளுக்கு முன்பு நான்கு மாதங்களில் முடிவடைதல் வேண்டும்.

(2–C) துணைவேந்தராக நியமனம் செய்வதற்கு தகுதியுள்ள நபர்களின் தேர்ந்த பெயர் பட்டியலைத் தயாரிப்பதற்கான நடைமுறையானது துணை வேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு குறைந்தது நான்கு மாதங்களில் தொடங்குதல் வேண்டும்.

(2–D) அந்தக்குழு, தன்னுடைய பரிந்துரையை அது அமைக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள் வேந்தருக்கு தன்னுடைய பரிந்துரையை அனுப்புதல் வேண்டும். அந்தக்குழு மேற்சொன்ன காலஅளவிற்குள் வேந்தருக்குத் தன்னுடைய பரிந்துரையை அனுப்பாதிருக்குமானால், வேந்தர், தன்னுடைய பரிந்துரையை அனுப்புவதற்கு மேலும் கால அவகாசம் அளிக்கலாம் அல்லது (2)– ஆம் உட்பிரிவிற்கிணங்க மற்றொரு குழுவை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கலாம்."

(ஆளுநரின் ஆணைப்படி)

**சு.ச. பூவலிங்கம்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**க. நரசிம்மன்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பின்வரும் சட்டமானது, 2018 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 26 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–

**சட்ட எண் 14/2018**

**1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர மற்றும் ஊரமைப்புச் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

**1.** **(1)** இந்தச் சட்டம், **2018** ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர மற்றும் ஊரமைப்பு **(**திருத்தச்**)** சட்டம் என வழங்கப்பெறும்**.** குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**(2)** இது, **2017**, ஜூலை **21** ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்**.**

தமிழ்நாடு சட்டம் 35/1972 **2.** **(**இதனில் இதன்பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படும்**) 1971** ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின் 63-B பிரிவின் கீழுள்ள விளக்கத்திற்கு பதிலாக, பின்வரும் விளக்கம் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:- பிரிவு **63**–Bக்கான திருத்தம்

**"விளக்கம்.-** இந்தப் பிரிவின் மற்றும் 63-D பிரிவின் நோக்கத்திற்காக, "தொடர்புடைய சட்டங்கள்" என்பது -

தமிழ்நாடு சட்டம் 35/1972 (i) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைப்பைப் பொறுத்தவரை, **1971** ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர மற்றும் ஊரமைப்புச் சட்டம் என்றும்;

தமிழ்நாடு சட்டம் IV/1919 (ii) சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை, **1919** ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டம் என்றும்;

தமிழ்நாடு சட்டம் 15/1971 (iii) மதுரை மாநகராட்சியைப் பொறுத்தவரை, **1971** ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டம் என்றும்;

தமிழ்நாடு சட்டம் 25/1981 (iv) கோயம்புத்தூர் மாநகராட்சியைப் பொறுத்தவரை, **1981** ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் என்றும்;

தமிழ்நாடு சட்டம் 27/1994 (v) திருச்சிராப்பள்ளி மாநகராட்சியைப் பொறுத்தவரை, **1994** ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் என்றும்;

தமிழ்நாடு சட்டம் 28/1994 (vi) திருநெல்வேலி மாநகராட்சியைப் பொறுத்தவரை, **1994** ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சி சட்டம் என்றும்;

தமிழ்நாடு சட்டம் 29/1994 (vii) சேலம் மாநகராட்சியைப் பொறுத்தவரை, **1994** ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி சட்டம் என்றும்;

தமிழ்நாடு சட்டம் 7/2008 (viii) திருப்பூர் மாநகராட்சியைப் பொறுத்தவரை, **2008** ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சி சட்டம் என்றும்;

(ix) ஈரோடு மாநகராட்சியைப் பொறுத்தவரை, 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சி சட்டம் என்றும்; தமிழ்நாடு சட்டம் 8/2008

(x) வேலூர் மாநகராட்சியைப் பொறுத்தவரை, 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சி சட்டம் என்றும்; தமிழ்நாடு சட்டம் 26/2008

(xi) தூத்துக்குடி மாநகராட்சியைப் பொறுத்தவரை, 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் என்றும்; தமிழ்நாடு சட்டம் 27/2008

(xii) தஞ்சாவூர் மாநகராட்சியைப் பொறுத்தவரை, 2013 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சி சட்டம் என்றும்; தமிழ்நாடு சட்டம் 24/2013

(xiii) திண்டுக்கல் மாநகராட்சியைப் பொறுத்தவரை, 2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சி சட்டம் என்றும்; தமிழ்நாடு சட்டம் 25/2013

(xiv) நகராட்சிகளையும் பேரூராட்சிகளையும் பொறுத்தவரை, 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் என்றும் ; மற்றும் தமிழ்நாடு சட்டம் V/1920

(xv) ஊராட்சி ஒன்றியங்களையும் கிராம ஊராட்சிகளையும் பொறுத்தவரை, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் என்றும், தமிழ்நாடு சட்டம் 21/1994

பொருள்படும்.

63–D மற்றும் 63E ஆகிய புதிய பிரிவுகள் புகுத்தப்படுதல்

**3.** முதன்மைச் சட்டத்தின் 63-C பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவுகள் புகுத்தப்படுதல் வேண்டும், அவையாவன:-

“**63-D** உறைவிடக் கட்டணங்களை விதித்தல்.– **(1)** ஒவ்வோர் உள்ளாட்சி அதிகார அமைப்பும் அல்லது நேர்வுக்கேற்ப, திட்ட அதிகார அமைப்பும், இந்தச் சட்டத்தின்படி அனுமதியளிக்கையில் அல்லது, நேர்வுக்கேற்ப தொடர்புடைய சட்டங்களின்படி கட்டட அனுமதியளிக்கையில், நகரகப் பகுதிகளில் உள்ள ஏழைகளுக்கு போதுமான வீட்டுவசதி வகை செய்யும் செலவின் நோக்கில் பங்களிப்பு செய்யும் வகையில் திட்டப்பகுதி முழுவதிலும் அல்லது திட்டப்பகுதியின் பகுதி எதிலும் நிலம் அல்லது கட்டடம் பயன்பாட்டை அல்லது பயன்பாட்டின் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மீது அல்லது நிலம் அல்லது கட்டடம் எதனையும் மேம்படுத்துவதன் மீது வகுத்துரைக்கப்படலாகும் குறைந்தபட்சத்திற்கு குறைவாகவும் அதிக பட்சத்திற்கு மேலாகவும் இல்லாத கட்டணங்கள் விதித்தல் வேண்டும் மற்றும் திட்டப்பகுதியின் வெவ்வேறு பகுதிகளுக்கும் வெவ்வேறு பயன்பாடுகளுக்கும் வெவ்வேறு வீதங்கள் வகுத்துரைக்கப்படலாம்.

**(2)** உறைவிடக் கட்டணங்களாவன, அத்தகைய மேம்பாடு எதனையும் மேற்கொள்கிற அல்லது நிறைவேற்றுகிற அல்லது பயன்பாடு எதனையும் ஏற்படுத்துகிற அல்லது அத்தகைய பயன்பாடு எதனையும் மாற்றுகிற நபர் எவருக்கும் விதிக்கத்தக்கதாகும்.

**(3)** உறைவிடக் கட்டணங்கள், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் வசூலிக்கப்படுதல் வேண்டும்.

“**63-E மாநில உறைவிட நிதியத்தை அமைத்தல்.– (1)** அரசு, நகரகப் பகுதிகளில் உள்ள ஏழைகளுக்குப் போதிய வீட்டுவசதி வழங்கும் பொருட்டு “மாநில உறைவிட நிதியம்” எனப்படும் நிதியம் ஒன்றை அமைக்கலாம்.

(2) 63-D பிரிவின்படி விதிக்கப்படும் உறைவிடக் கட்டணங்கள் இந்த நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(3) அரசால் நட்பேற்பளிக்கப்படும் பிற ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் பணம் கூட இந்த நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(4) இந்த நிதியம், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் கையாளப்படுதலும், பயன்படுத்தப்படுதலும் வைத்து வரப்படுதலும் வேண்டும்."

4. முதன்மைச் சட்டத்தில், அல்லது நீதிமன்றம் எதனின் தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது ஆணை எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், 2017 ஜூலை 21 ஆம் நாளுக்கும் இந்தச் சட்டம் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியான தேதிக்கும் இடையே எச்சமயத்திலும் உறைவிடக் கட்டணங்கள் விதிப்பு அல்லது வசூலிப்பு எதுவும் செல்லா நிலையதாகவோ அல்லது எப்பொழுதும் செல்லா நிலையதாக இருந்திருப்பதாகவோ கொள்ளப்படுதல் ஆகாது மற்றும் விதிக்கப்பட்ட அல்லது வசூலிக்கப்பட்ட அத்தகைய கட்டணமானது, அத்தகைய விதிப்போ, வசூலிப்போ செய்யப்பட்ட போது அனைத்து முக்கிய சமயங்களிலும் முதன்மை சட்டம், இந்தச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறு நடைமுறையில் இருந்தாற் போன்று சட்டப்படி எப்போதும் செல்லுந்தன்மையுடன் விதிக்கப்பட்டதாக அல்லது வசூலிக்கப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய விதிப்போ வசூலிப்போ சட்டப்படி செய்யப்படவில்லை என்ற எதுவாகினுமான காரணமாக உள்ளாட்சி அதிகார அமைப்பு, திட்ட அதிகார அமைப்பு எதற்கும் நகர மற்றும் ஊரமைப்பு இயக்குநருக்கு, அரசுக்கு அல்லது பிற அதிகார அமைப்பு எதற்கும் எதிராக உரிமை வழக்கோ, பிற சட்ட நடவடிக்கையோ நடத்தப்படுதலோ அல்லது தொடர்ந்து நடத்தப்படுதலோ ஆகாது. செல்லுந்தன்மை

(ஆளுநரின் ஆணைப்படி)

**சு.ச. பூவலிங்கம்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**க. நரசிம்மன்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பின்வரும் சட்டமானது, 2018–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது. மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–

**சட்ட எண் 19/2018**

## 1997–ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச்சட்டம், 2018–ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் மருத்துவமனை நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது மாநில அரசால் அறிவிக்கையின் வாயிலாக குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(தமிழ்நாடு சட்டம் 4/1997)

நெடுந்தலைப்பில் திருத்தம்.

2. (இதன் பின்பு இதில் முதன்மைச்சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1997–ஆம் ஆண்டில் தமிழ்நாடு தனியார் மருத்துவமனை நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தில் நெடுந்தலைப்பில் "தனியார் மருத்துவமனை நிறுவனங்கள்'' என்று வருகின்ற சொற்றொடருக்கு பதிலாக "மருத்துவமனை நிறுவனங்கள்'' என்னும் சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

1–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தில் 1–ஆம் பிரிவில்,–

(1) (1)–ஆம் உட்பிரிவிற்காக பின்வரும் உட்பிரிவினை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும் ;-

''(1) இந்தச்சட்டம், 1997–ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவமனை நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டம் என வழங்கப் பெறும்".

(2) (3)–ஆம் உட்பிரிவிற்காக பின்வரும் உட்பிரிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

''(3) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.".

"தனியார் மருத்துவமனை நிறுவனம்'' மற்றும் ''தனியார் மருத்துவமனை நிறுவனங்கள்'' என்ற சொற்றொடரை மாற்றாக அமைத்தல்.

4. முதன்மைச்சட்டத்தில் "தனியார் மருத்துவமனை நிறுவனம்'' மற்றும் ''தனியார் மருத்துவமனை நிறுவனங்கள்'' என்ற சொற்றொடர் எங்கெல்லாம் வருகின்றதோ அங்கெல்லாம் ''மருத்துவமனை நிறுவனம்'' மற்றும் ''மருத்துவமனை நிறுவனங்கள்'' என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

2-ஆம் பிரிவிற்கான திருத்தம்.

5. முதன்மைச் சட்டத்தின் 2–ஆம் பிரிவில்,–

(1) கூறு (a) கூறு (aa) என திருப்பி எழுதப்படவேண்டும் மற்றும் அவ்வாறு திருப்பி எழுதப்பட்ட கூறு (aa) க்கு முன்பு பின்வரும் கூறு புகுத்தப்பட வேண்டும் அதாவது:-

(a) ''மருத்துவ நிறுவனம்'' என்பது மருத்துவ முறைகளினால் ஏற்பளிக்கப்பட்ட எதையும் மற்றும் –

*(i)* பல் மருத்துவமனைகள், மகப்பேறு மருத்துவமனை, மருந்தகம், கலந்தாய்வு அறை, மருத்துவமனை, பல்வகை நோய்க்கான மருத்துவமனை அல்லது பண்டுவமனை உள்ளடங்கலான ஒரு பொது மருத்துவமனையை;

*(ii)* ஒரு நிலையம் அல்லது மையம், அது எந்தப் பெயரால் அழைக்கப்பட்டாலும் அங்கு உள் நோயாளியாகவோ அல்லது வெளி நோயாளியாகவோ அறுவைச் சிகிச்சை நடைமுறைகளுடனோ அல்லது இல்லாமலோ ஒன்று உடல் நோயாலோ அல்லது மனநோயாலோ பாதிக்கப்பட்டுள்ள, காயமடைந்துள்ள அல்லது உடல் சிகிச்சைக்காக பலகீனமான நபர் அனுமதிக்கப்பட்டுள்ளதையும்;

*(iii)* கூட்டுறுமமாகப் பதிவு செய்யப்பட்டிருப்பினும் அல்லது இல்லாவிடினும், நபர் அல்லது நபர்களின் குழுமம் எதனாலும் மாநில அரசால் அல்லது மைய அரசால் அல்லது மாநில மற்றும் மத்திய அரசின் துறை எதனாலும் அல்லது பொது அல்லது தனியார் பொறுப்புக் கட்டளை ஒன்றால் அல்லது அரசிற்கு அல்லது ஓர் உள்ளாட்சி அதிகார அமைப்பிற்கு சொந்தமாக இருப்பினும் அல்லது இல்லாவிடினும் ஒரு நிறுமத்தால் நிறுவப்பட்ட அல்லது பராமரிக்கப்பட்டு வரும் வேண்டிய மருத்துவ வசதியினை ஆய்வக அல்லது பிற மருத்துவக் கருவிகளின் உதவியுடன் கதிரியக்க வகையிலும் சரி, உயிரியில் சார்ந்த வகையிலும் சரி அல்லது பிறநோய் குறியினை மருத்துவ சோதனையினை கொண்டுள்ள மருத்துவப் பணிகளை செய்துவரும் ஒரு மருத்துவ நிறுவனம் என்று பொருள்படுவதோடு அவற்றை உள்ளடக்கும். ஆனால் ஆயுதப்படையினரின் கட்டுப்பாட்டிலோ அல்லது மேலாண்மையில் உள்ள பண்டுவமனை நிறுவனங்களை உள்ளடக்காது.

**விளக்கம்:** இந்தக் கூறுகளின் நோக்கத்திற்காக ''ஆயுதப் படைகள்'' என்பது 1950–ஆம் ஆண்டு ஆயுதப்படைச் சட்டம், 1950–ஆம் ஆண்டு வானூர்தி படைச் சட்டம் மற்றும் 1957–ஆம் ஆண்டு கடற்படைச் சட்டம் ஆகியவற்றின்படி அமைத்துருவாக்கப்பட்ட படைகள் என்று பொருள்படும்.

(மையச்சட்டம் 46/1950)
(மையச்சட்டம் 45/1950)
(மையச்சட்டம் 62/1957)

(2) (aa) எனும் கூறுக்குப் பின்னர் பின்வரும் கூறு புகுத்தப்படுதல் வேண்டும் அதாவது:-

''(aaa) ''மாவட்ட குழு'' என்பது 2-D எனும் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட குழு என்று பொருள்படும்;".

(3) (c) எனும் கூறுக்காக, பின்வரும் கூறுகள் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"(c) ஏற்பளிக்கப்பட்ட மருத்துவமுறை'' என்பது ஆங்கில மருத்துவம், யோகா, இயற்கை மருத்துவம், ஆயுர்வேதா, ஹோமியோபதி, சித்தமருத்துவம் அல்லது யுனானி மருத்துவ முறை அல்லது மைய அரசால் அல்லது மாநில அரசால் ஏற்பளிக்கப்பட்ட பிற மருத்துவ முறை எதுவும் என்று பொருள்படும்;

(d) ''மாநில அளவிலான அறிவுரைக்குழு'' என்பது, 2-A எனும் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட குழு என்று பொருள்படும்;".

2-A, 2-B, 2-C, 2-D, 2-E மற்றும் 2-F எனும் புதிய கூறுகளை புகுத்துதல்.

**6.** முதன்மைச் சட்டத்தின் 2–ஆம் பிரிவிற்கு பின்னர் பின் வரும் பிரிவுகள் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

**“2-A. மாநில அளவிலான அறிவுரைக் குழுவினை அமைத்தல்.**- (1) மாநில அரசு, அறிவிக்கையினால், மாநில அளவில் அறிவுரைக்குழு என்று அழைக்கப்படலாகும் குழு ஒன்றை அமைத்தல் வேண்டும்.

(2) மாநில அளவிலான அறிவுரைக் குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அதாவது:-

(a) மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் பதவி வழி தலைவராக இருத்தல் வேண்டும் ;

(b) மருத்துவக் கல்வி இயக்குநர் பதவி வழியில் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர்;

(c) இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆணையர் பதவி வழியில் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர்;

(d) பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் பதவி வழியில் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர்;

(e) ஆயுர்வேதம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்த மருத்துவம் மற்றும் ஹோமியோபதியில் ஓராண்டிற்கு சுழற்சியின் அடிப்படையில் தொடர்புடைய மாநில மருத்துவ மன்றத்தால் பெயர் குறித்து அமர்த்தப்பட்ட ஆயுர்வேதம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்த மருத்துவம் மற்றும் ஹோமியோபதி மருத்துவ முறைகளிலிருந்து உறுப்பினர் ஒருவர்;

(f) இந்திய மருத்துவ சங்கத்தின் மூலம் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்;

(g) தமிழ்நாடு மருத்துவ மன்றத்தின் மூலம் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்;

(h) தமிழ்நாடு பல் மருத்துவ மன்றத்தின் மூலம் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்; மற்றும்

(i) தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் குழுமத்தின் மூலம் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்;

(3) நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் மூன்றாண்டு கால அளவிற்கு பதவி வகித்தல் வேண்டும். ஆனால் மேலுமான மூன்றாண்டு கால அளவிற்கு மறு நியமனத்திற்கு தகுதியுடையவர் ஆவார்.

**2-B. மாநில அளவிலான அறிவுரைக் குழுவின் கூட்டங்கள்.**- (1) மாநில அளவிலான அறிவுரைக்குழு வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலம் மற்றும் அத்தகைய இடத்தில் குறைந்தது ஆண்டுக்கு ஒரு முறை கூடுதல் வேண்டும்.

(2) தலைவர் அல்லது அவருடைய வருகையின்மையில் வருகை தந்துள்ள உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் எவரும் கூட்டத்திற்கு, தலைமை தாங்குதல் வேண்டும்.

(3) கூட்டம் நடத்த தேவைப்படும் குறைந்தளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் அந்தக் கூட்டத்தில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை வகுத்துரைக்கலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

**2-C. மாநில அளவிலான அறிவுரைக் குழுவின் செயற்பணிகள்.–** மாநில அளவிலான அறிவுரைக் குழு மருத்துவ நிறுவனங்களை முறைப்படுத்துதல் தொடர்பான பொருட்பாடுகளின் பேரில் அரசுக்கு அறிவுரை வழங்குதல் வேண்டும் மற்றும் அப்போதைக்கப்போது அரசால் அதற்கு குறித்தளிக்கப்படலாகும் அத்தகைய பிற செயற்பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

**2–D. மாவட்ட குழுவினை அமைத்துருவாக்குதல்.– (1)** அரசானது, ஒவ்வொரு மாவட்டத்திற்காக மாவட்டகுழு என அழைக்கப்படுகின்ற ஒரு குழுவினை அறிவிக்கையினால் அமைத்தல் வேண்டும்.

(2) மாவட்டக் குழுவானது பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும், அதாவது:–

(a) மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகளின் துணை இயக்குநர் பதவி வழி தலைவராக இருப்பார்;

(b) மாவட்ட அரசு மருத்துவ கல்லூரியின் முதல்வர்;

(c) மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர்;

(d) தமிழ்நாடு மருத்துவ மன்றத்தால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்;

(e) இந்திய மருத்துவச் சங்கத்தால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்;

(f) ஆயுர்வேதம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்தமருத்துவம் மற்றும் ஹோமியோபதியில் ஓராண்டிற்கு சுழற்சியின் அடிப்படையில் தொடர்புடைய மாநில மருத்துவ மன்றத்தால் பெயர் குறித்து அமர்த்தப்பட்ட ஆயுர்வேதம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்த மருத்துவம் மற்றும் ஹோமியோபதி மருத்துவ முறைகளிலிருந்து உறுப்பினர் ஒருவர்; மற்றும்

(g) தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் குழுமத்தால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்.

(3) நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் மூன்று ஆண்டு காலத்திற்கு பதவி வகித்தல் வேண்டும் ஆனால் மீண்டும் மூன்று ஆண்டு காலத்திற்கு மறு நியமனத்திற்கு தகுதி உடையவர் ஆவார்.

**2-E. மாவட்ட குழுவின் கூட்டங்கள்.– (1)** மாவட்ட குழுவானது குறைந்தது ஆறு மாதங்களுக்கு ஒரு முறையாவது வகுத்துரைக்கலாகிற அத்தகைய நேரத்திலும், அத்தகைய இடத்திலும் கூடுதல் வேண்டும்.

(2) தலைவர் அல்லது அவருடைய வருகையின்மையில் வருகை தந்துள்ள உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் எவரும் கூட்டத்திற்கு தலைமை தாங்குதல் வேண்டும்.

(3) கூட்டம் நடத்த தேவைப்படும் குறைந்தளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் அந்தக் கூட்டத்தில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை வகுத்துரைக்கலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

**2-F. மாவட்ட குழுவின் செயற்பணிகள்.-** மாவட்ட குழுவானது மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்தல் விசயங்களில் மாவட்ட தகுதிறம் வாய்ந்த அதிகார அமைப்பிற்கு உதவி செய்தலும், ஆலோசனை வழங்குதலும் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கலாகும் அதனுடன் தொடர்புடைய அல்லது அவற்றிற்க்கு சார்வுறுவான அத்தகைய பிற கடமைகளையும் ஆற்றுதல் வேண்டும்.''.

7. முதன்மைச் சட்டத்தின் 3–ஆம் பிரிவில் (1)–ஆம் உட்பிரிவிற்காக பின்வரும் உட்பிரிவினை மாற்றாக அமைத்தல் வேண்டும், அதாவது:– 3ஆம் பிரிவிற்கான திருத்தம்.

"(1) நபர் எவரும் இந்தச் சட்டத்தின்படி அத்தகைய மருத்துவ நிறுவனங்களை உரியவாறு பதிவு செய்தாலன்றி மருத்துவ நிறுவனங்கள் எதையும் நடத்துதல் ஆகாது:

**வரம்புரை:**– 2018–ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் மருத்துவ நிறுவனங்கள் திருத்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்று (இதில் இதன் பின்பு அறிவிக்கை செய்யப்பட்ட தேதி என்று சுட்டப்பட்டுள்ளவாறு) இருக்கின்ற மருத்துவ நிறுவனம் ஒவ்வொன்றும் அறிவிக்கை செய்யப்பட்ட தேதியிலிருந்து ஒன்பது மாதங்களுக்குள் பதிவிற்காக விண்ணப்பித்தல் வேண்டும் மற்றும் அறிவிக்கை செய்யப்பட்ட தேதிக்குப் பின்பு நிறுவப்பட்டுள்ள மருத்துவ நிறுவனமானது அதனுடைய தொடக்கத் தேதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் பதிவிற்காக விண்ணப்பித்தல் வேண்டும்:

**மேலும் வரம்புரை:** அறிவிக்கை செய்யப்பட்ட தேதியன்று உள்ள மருத்துவ நிறுவனம் ஒவ்வொன்றும் அத்தகைய மருத்துவ நிறுவனமானது விண்ணப்பித்தாலன்றி மற்றும் அவ்வாறு பதிவு செய்திருந்தால் அல்லது அத்தகைய விண்ணப்பத்தை முடிவு செய்யும்வரை இதில் எது முந்தியதோ அதுவரை, அறிவிக்கை செய்துள்ள தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்கள் கழிவுறுவதன் பேரில் அதனுடைய மருத்துவ தொழிலை நிறுத்தி வைத்தல் வேண்டும்.";

8. முதன்மைச் சட்டத்தின் 5–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவை (1-A) உட்பிரிவாக மறு எண்ணிடப்படுதல் வேண்டும் மற்றும் அவ்வாறு மறு எண்ணிடப்பட்டுள்ள (1-A) உட்பிரிவிற்கு முன்பு, பின்வரும் உட்பிரிவைப் புகுத்துதல் வேண்டும், அதாவது:– 5ஆம் பிரிவிற்கான திருத்தம்.

"(1) மருத்துவ நிறுவன அமைப்பின் பதிவுச் சான்றிதழை வைத்திருப்பவர் மொத்தத்தில் மூன்று முறை இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதனின்படி தண்டிக்கப்பட்டிருக்கிறவிடத்து தகுதிறம் வாய்ந்த அதிகார அமைப்பானது, பதிவுச் சான்றிதழை ரத்து செய்தல் வேண்டும் மற்றும் மருத்துவ நிறுவனத்தை புதிதாக பதிவு செய்வதற்காக விண்ணப்பிப்பதற்கு அனுமதித்தல் கூடாது.".

5–A, 5–B 5-C எனும் புதிய பிரிவுகளைப் புகுத்துதல் 9. முதன்மைச் சட்டத்தின் 5–ஆம் பிரிவிற்குப் பின்பு பின்வரும் பிரிவுகளைப் புகுத்துதல் வேண்டும், அதாவது:–

"**5-A. மருத்துவ நிறுவன அமைப்புகளால் வசதிகள் மற்றும் சேவைகளை பேணுதல்.**– (1) மருத்துவ நிறுவன அமைப்பு ஒவ்வொன்றும் வகுத்துரைக்கலாகிற குறைந்த அளவு தர நிலைகளை உடைய வசதிகளையும் சேவைகளையும் பேணி வருதல் வேண்டும்.

(2) அரசானது, அனைத்து ஏற்பளிக்கப்பட்ட மருத்துவ முறைகளின்படி பல்வேறு வகையான மருத்துவ நிறுவன அமைப்புகள் தொடர்பாக குறைந்த அளவு தர நிலையிலான வசதிகளுக்கும் சேவைகளுக்கும் வகுத்துரைத்தல் வேண்டும்.

**5–B. மருத்துவ நிறுவனங்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள்.**– மருத்துவ நிறுவனம் ஒவ்வொன்றும் பின்வரும் கடமைகளையும் பொறுப்புகளையும் பின்பற்றுதல் வேண்டும், அதாவது:–

(a) பாதிக்கப்பட்ட நபர்கள் அவர்களே மருத்துவ நிறுவனங்களில் வருகை புரியும்போது, சாலை விபத்துக்கள், விபத்து அல்லது தற்கொலை தீக்காயங்கள் அல்லது விசம் அருந்துதல் அல்லது குற்றத் தாக்குதல் மற்றும் அதனைப் போன்ற அனைத்து சட்டம் சார்ந்த மருத்துவ நேர்வுகளில் அல்லது தீவிர சட்டம் சார்ந்த மருத்துவ நேர்வுகளாக சாத்தியமுள்ள நேர்வுகளில் மருத்துவ முதல் அவசர சிகிச்சை அளித்தல் வேண்டும் மற்றும் பிற உயிர்காப்பு அல்லது நிலையான அவசர நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்;

(b) அவ்வப்பொழுது அரசால் குறித்துரைக்கலாகிற அத்தகைய முறையில் அனைத்து தேசிய மற்றும் மாநில சுகாதார திட்டங்களை நிறைவேற்றுவதில் பங்கு கொள்ளுதல் மற்றும் அதில் குறித்துரைக்கப்பட்டுள்ள அதிகார அமைப்புகளுக்கு காலந்தோறும் அறிக்கைகளை அளித்தல்;

(c) அந்தந்த மருத்துவ முறைக்காக வகுத்துரைக்கலாகிற அத்தகைய படிவத்திலும் அத்தகைய முறையிலும் மருத்துவ பதிவேடுகளை வைத்து வருதல்;

(d) தொற்றும் நோய்களை பரவாமல் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கையை எடுத்தல் மற்றும் அவ்வவ்பொழுது அரசு பணிக்கின்றவாறு தொற்றா நோய்களை கட்டுப்படுத்தல்; மற்றும்

(e) வகுத்துரைக்கலாகிறவாறான அத்தகைய பிற கடமைகள் மற்றும் பொறுப்புகள்.

**5–C. ஆண்டுதோறும் மருத்துவ நிறுவனங்களின் பட்டியலை வெளியிடுதல்.–** தகுதிறம்வாய்ந்த அதிகார அமைப்பானது வகுத்துரைக்கலாகிறவாறான அத்தகைய படிவத்தில் மருத்துவ நிறுவனங்களின் பதிவேட்டை பராமரித்து வருதல் வேண்டும் மற்றும் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதத்தின் போது, பதிவு செய்துள்ள மருத்துவ நிறுவனங்களின் பட்டியலை வகுத்துரைக்கலாகிறவாறு அவைகளுக்குத் தொடர்புடைய விவரங்களுடன் சேர்த்து ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடுதல் வேண்டும்.".

8ஆம் பிரிவினை மாற்றாக அமைத்தல்.

10. 8–ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"**8. பணத்தண்டங்கள்.– (1) 3–**ஆம் பிரிவின் **(1)–**ஆம் உட்பிரிவினை மீறுகின்ற நபர் எவரையும் ஐந்தாயிரத்திற்கு குறையாத பணத்தண்டம் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும், ஆனால் அந்தப் பணத் தண்டமானது ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாம்.

(2) இந்தச் சட்டத்தின் பிற வகை முறை எதையும் அல்லது அதன்படி இயற்றப்பட்ட விதி எதையும் அல்லது பதிவின் நிபந்தனை எதையும் மீறுகின்ற நபர் எவரையும் ஐந்தாயிரத்துக்கு குறையாத பணத்தண்டம் விதித்து தண்டித்தல் வேண்டும் ஆனால் அந்த பணத்தண்டமானது ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாம்:

**வரம்புரை:** இந்த உட்பிரிவின் மற்றும் **(1) –**ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக நீதிமன்றமானது, தீர்ப்புரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள போதிய அல்லது சிறப்பு காரணங்கள் எதற்காகவும் ஐந்தாயிரம் ரூபாய்க்கு குறைவான பணத்தண்டத்தை விதிக்கலாம்.

(3) இந்தச் சட்டத்தின்படி அத்தகைய பணிப்புரைகளை பிறப்பிப்பதற்கு அதிகாரமுடைய நபர் அல்லது அதிகார அமைப்பு எதனாலும் சட்டப்படி வழங்கப்பட்ட பணிப்புரை எதற்கும் இசைய மறுக்கின்ற அல்லது இந்தச் சட்டத்தின்படி செயல்படுவதற்கு வேண்டுறுத்தப்பட்ட அல்லது அதிகாரம் கொண்டுள்ள அத்தகைய நபர் அல்லது அதிகார அமைப்பானது செயற்பணி எதையும் ஆற்றுகையில் தடுக்கின்ற நபர் எவரையும் முப்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் பணத்தண்டம் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.''.

(4) இந்தச் சட்டத்தால் அல்லது இந்தச் சட்டத்தின்படி தகவல் எதையும் அளிப்பதற்கு வேண்டப்பட்ட அல்லது அத்தகைய தகவலை வேண்டுமென்றே தர மறுக்கின்ற அல்லது தவறான தகவல் என்று தெரிந்திருந்தும் அல்லது அந்தத் தகவல் உண்மையானது என்று நம்புவதற்குரியது அல்ல என்று தான் தெரிந்தும் தகவல் அளிக்கின்ற நபர் எவரையும் முப்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் பணத்தண்டம் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.".

11. 1997 ஏப்ரல் 11 தேதியிடப்பட்ட ***தமிழ்நாடு அரசின்*** சிறப்பிதழின் பகுதி II –இல் பிரிவு 2 இல் வெளியிடப்பட்டுள்ள சுகாதார மற்றும் குடும்ப நலத்துறையின் அறிவிக்கை எண்.198 ஐ, 1997 ஏப்ரல் 14–ஆம் தேதியன்று மற்றும் தேதியிலிருந்து நீக்கறவு செய்யப்பட்டதாக கொள்ளப்படுதல் வேண்டும். நீக்கறவு.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சு.ச. பூவலிங்கம்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**க. நரசிம்மன்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.